விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆவணி - 17 வியாழன் 02.09.2021 மலர் - 2, இதழ் - 149

# தடையை தாண்டும் சீன செயலிகள்

பாரத மக்களின் தரவுகளை சீன செயலிகள் திருடிய காரணத்தினால் அவற்றில் 200க்கும் அதிகமானவற்றை மத்திய அரசு தடை செய்தது. இந்த பிரச்சனைக்கு பின்பும் பாரதத்தில் சில சீன செயலிகள் இயங்கி வருவது மட்டும் அல்லாமல் கடந்த ஒரு வருடத்தில் மிகப்பெரிய அளவிலான வளர்ச்சியையும் அடைந்துள்ளது.

அலிபாபா, சியோமி உள்ளிட்ட பல முன்னணி நிறுவனங்களின் செயலிகள் கூட தங்களது சீன அடையாளத்தை மறைத்து சீன பெயர் அல்லாத புதிய நிறுவனத்தின் பெயரில் வலம் வருகிறது. பாரதத்தில் தற்போதுள்ள டாப் 60 செயலிகள் பட்டியலில் 8 சீன செயலிகள் உள்ளது. இவற்றிக்கு மட்டும் சுமார் 211 மில்லியன் வாடிக்கையாளர்கள் உள்ளனர். சீன செயலிகள் பாதுகாப்பற்றது என தெரிந்தும் சிலர் சீன செயலிகளை பதிவிறக்கம் செய்துள்ளனர்.

ப்ளேஇட் (Alibaba/Guanzhou Nemo) என்னும் சீன செயலி பாரதத்தில் வேகமாக வளரும் செயலிகளில் ஒன்றாக உள்ளது. வெறும் 28 மில்லியன் வாடிக்கையாளர்களை வைத்திருந்த ப்ளேஇட், தற்போது 67 மில்லியன் வாடிக்கையாளர்களை பெற்று உள்ளது. இதைத் தொடர்ந்து ஷேர்மி (சியோமி), ஜிலி (சியோமி), டிகி (YY இன்க்), ரெசோ (பைட் டான்ஸ்), நாய்சி (YY இன்க்), mAst (Xiaoying Technologies), மிவி (பையிட் டான்ஸ்) ஆகியவை அதிக வாடிக்கையாளர்கள் கொண்ட பட்டியலில் அடுத்தடுத்த இடத்தை பிடித்துள்ளன. இந்த செயலிகளும் வாடிக்கையாளரின் பல வித முக்கியத் தரவுகளை சேகரித்துள்ளன.

கூகுள் ப்ளே ஸ்டோர் தளத்தில் இந்த செயலிகளின் உரிமையாளர்கள், நாடு ஆகிய தரவுகள் மறைக்கப்பட்டாலும், இந்நிறுவனத்தின் இணையதளம், லிங்கிடு இன் ப்ரொபைல் ஆகியவற்றை கொண்டு ஆராயும்போது இவை அனைத்தும் சீன நிறுவனங்களின் செயலிகள்தான் என்பது வெளிப்படையாக தெரிகிறது.

விஜயபாரதம்



# விவசாயிகளை வஞ்சிக்கும் தமிழக அரசு

தமிழக அரசின் விதைச் சான்றளிப்பு மற்றும் அங்கக சான்றளிப்பு (ஆர்கானிக் சான்று) துறை, கோவையில் செயல்படுகிறது. இந்த அலுவலகத்தை சென்னைக்கு மாற்றுவதாக, தமிழக வேளாண் அமைச்சர் பன்னீர்செல்வம் சட்டசபையில் அறிவித்தார். ஆனால், மாநிலத்தில் அங்ககச்சான்று பெற்றுள்ள விவசாயிகள், விவசாயக் குழுக்களில், 50 சதவீதம் பேர், கோவை சுற்றுவட்டார மாவட்டங்களை சேர்ந்தவர்கள். விதை உற்பத்தி நிறுவனங்களும் இப்பகுதியில் அதிகம். அரசின் இந்த முடிவால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள், வேளாண் உற்பத்தி, ஏற்றுமதி கடுமையாக பாதிக்கும். நிர்வாக நலன் என்று கூறி, சென்னைக்கு கொண்டு செல்வது சரியல்ல. இத்திட்டத்தை தமிழக அரசு உடனடியாக கைவிட வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

விஜயபாரதம்

# கோயில் சுவற்றில் கிறிஸ்தவ விளம்பரம்



விஜயபாரதம்

மதுரை மாவட்டம் தெப்பக் குளம் அருகே முனியசாமி கோயில் சுற்றுச் சுவற்றில் கலங்கரை விளக்கு ஏ.ஜி கிறிஸ்தவ சபையைச் சேர்ந்தவர்கள் பைபிள் வாசகங்களுடன் விளம்பரம் வரைந்து இருந்தனர். அந்த கிறிஸ்தவ சபையின் 30வது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி இந்த விளம்பரம் இடம் பெற்றிருந்தது. ஹிந்து கோயிலின் சுவற்றில் பிற மத போதனைகளும் விளம்பரமும் இடம் பெற்றிருந்ததால் இதற்கு அப்பகுதில் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். சமூக நல்லிணக்கத்துக்கும் பங்கம் விளைவிக்கும் வகையில் திட்டமிட்டே வரையப்பட்டிருந்த அந்த விளம்பரம் குறித்து இந்து முன்னணியினரின் அளித்த புகாரை அடுத்து அந்த விளம்பரம் அழிக்கப்பட்டது.

# பிரபுபாதா நினைவு நாணயம்



விஜயபாரதம்

இஸ்கான் என்ற அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம் நிறுவியவர் பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா. அவரின் 125வது பிறந்த நாளை முன்னிட்டு, பிரதமர் நரேந்திர மோடி காணொலிக் காட்சி வாயிலாக ரூ. 125 மதிப்பிலான நினைவு நாணயத்தை வெளியிட்டு, நிகழ்ச்சியில் உரையாற்றினார். சுவாமி பிரபுபாதா சுமார் 100 கோயில்களை நிறுவியுள்ளதுடன், உலகிற்கு பக்தி பாதையை எடுத்துரைக்கும் ஏராளமான புத்தகங்களையும் எழுதியுள்ளார். உலகிற்கு பக்தி பாதையை எடுத்துரைக்கும் ஏராளமான புத்தகங்களையும் எழுதியுள்ளார். உலகம் முழுவதும் கிருஷ்ண பக்தி இயக்கத்தை பரப்பி வரும் இஸ்கான், ஸ்ரீமத் பகவத் கீதை உள்ளிட்ட இலக்கிய நூல்களை 89 மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளது. வேத இலக்கிய நூல்களை உலகம் முழுவதும் கொண்டு சேர்ப்பதில் முக்கிய பங்களிப்பை அளித்து வருகிறது.



விஜயபாரதம்

# பஞ்சமி நிலம்

வருவாய் துறை மீதான மானிய கோரிக்கை விவாதத்தில் பேசிய பா.ஜ.க சட்டமன்ற உறுப்பினர் வானதி சீனிவாசன், ஏழ்மையினாலும், அறியாமையினாலும், பஞ்சமி நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டதாக கூறினார். இதற்கு பதிலளித்துப் பேசிய வருவாய்த்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர் ராமச்சந்திரன், ஒரு லட்சத்து 47 ஆயிரத்து 296 ஏக்கர் நிலம் பட்டியலின மக்களுக்கு பஞ்சமி நிலம் வழங்கப்பட்டது. சிலர் வறுமை காரணமாக விற்றுள்ளனர். இதை ஆராய மாவட்ட கலெக்டர்களிடம் அறிக்கை கேட்டுள்ளோம். பஞ்சமி நிலங்களை மீட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும் என்றார். இதற்கு, இதை அரசாணை வழியாக செய்ய முடியாது. கர்நாடகாவில் உள்ளது போல் சட்டம் இயற்ற வேண்டும் என கூறினார் வானதி சீனிவாசன். 'அப்படியே பல ஆண்டுகளாக பதில் தெரியாமல் இருக்கும் முரசொலி நிலம் குறித்தும் அதன் மூலப்பத்திரம் குறித்தும் உண்மையை தெரிவித்தால் நன்றாக இருக்கும்' என நெட்டிசன்கள் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

---




விஜயபாரதம்

கொரோனா நோய் தொற்று நமது பாரதப் பொருளாதாரத்தை மட்டுமல்ல உலக பொருளாதாரத்தையே ஆட்டி வைத்துள்ளது. கொரோனா சற்றித் தணிந்துள்ள இந்த சூழலில் நமது பாரதப் பொருளாதாரம் மீண்டும் வேகமெடுக்கத் துவங்கியுள்ளது. அதற்கு ஆதாரமாக, பாரதப் பொருளாதார வளர்ச்சி வரும் காலாண்டில் 20% வரையில் வளர்ச்சி அடையும் என 40 பொருளாதார வல்லுனர்கள் இணைந்து கணித்துள்ளனர். அவர்களின் ஆய்வு முடிவுகள் ரியூட்டர்ஸ் இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இதேபோல எஸ்.பி.ஐ வங்கியும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி இக்காலகட்டத்தில் 18.5 சதவீதமாக வளரும் என கணித்துள்ளது. ரிசர்வ் வங்கி வரும் காலாண்டின் பொருளாதார வளர்ச்சி அளவீட்டை 21.4 சதவீதமாகக் கணித்துள்ளது. இந்தியா ரேட்டிங்ஸ் & ரிசர்ச் நிறுவனம் வரும் காலாண்டில் நாட்டின் வளர்ச்சி 9.4 சதவீதமாக இருக்கும் எனக் கணித்துள்ளது. இப்படி வெளியாகியுள்ள பல்வேறு பொருளாதார கணிப்புகள் அனைத்தும் நமது பாரதத்தின் பொருளாதார வளர்ச்சி இனிவரும் காலங்களில் உயர்வு அடையும் என்றே தெரிவிக்கிறது.

# அதிகரித்த ஜி.டி.பி



விஜயபாரதம்

கொரோனா தொற்றால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சிக்குப் பிறகு நாட்டின் பொருளாதாரம் மீட்புப் பாதையில் செல்கிறது என்பதற்கான அடையாளமாக, நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் பாரதத்தின் பொருளாதாரம் எதிர்பார்த்ததை போல. 20.1 சதவீதமாக வளர்ச்சி கண்டுள்ளது. இது கடந்த காலாண்டில் மோசமான கொரோனா தாக்க சூழலுக்கு மத்தியில் மத்திய அரசின் சீரிய முயற்சியால் ஏற்பட்ட நல்ல வளர்ச்சியை குறிக்கிறது. இது ஒரே காலாண்டில் மிக உயர்ந்த ஜி.டி.பி வளர்ச்சியாகும். கொரோனா இரண்டாம் அலைக்கு மத்தியில் பொருளாதாரம், அவ்வளவாக பாதிக்கப்படவில்லை என்பதையே இது காட்டுகிறது என தலைமை பொருளாதார ஆலோசகர் அரவிந்த் சுப்ரமணியன் கூறியுள்ளார். முன்னதாக அவர் பொருளாதாரம் 'வி 'வடிவ வளர்ச்சியினை காணலாம் என கூறியிருந்தார். தற்போது அதே போல மீண்டும் பொருளாதாரம் வளர்ச்சி பாதைக்கு எட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# பெருகும் ஐ.டி.வேலைவாய்ப்புகள்




விஜயபாரதம்

இந்த ஆண்டு மட்டும் பாரதத்தில் உள்ள கணிணி மென்பொருள் துறையை சேர்ந்த ஐ.டி நிறுவனங்களில் எப்போதும் இல்லாத அளவிற்குச் சுமார் 1,லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது. கொரோனா தொற்று ஏற்படுத்திய மாற்றங்கள் காரணமாக உலக நாடுகளில் உள்ள பல நிறுவனங்கள் தங்கள் தொழில்நுட்பத்தில் பெரிய அளவிற்கு மாறுதல் செய்து வருகின்றன. இதனால் பாரத ஐ.டி நிறுவனங்கள் அதிகளவில் ஆர்டர்களைப் பெற்று வருகிறது. திடீரென அதிகளவிலான வர்த்தகம், ஐ.டி நிறுவனங்களில் ஊழியர்கள் பற்றாகுறை காரணமாக நாட்டின் முன்னணி ஐ.டி நிறுவனங்கள் அதிகளவிலான ஊழியர்களை இந்த ஆண்டுப் பணியில் அமர்த்த முடிவு செய்துள்ளது. திறன் வாய்ந்த ஊழியர்களை அதிகளவில் வேலைக்குச் சேர்ப்பதை விடவும், ஐ.டி துறை சார்ந்த திறன்களைக் கொண்டு இருக்கும் கல்லூரி படிப்பு முடிந்த புதிய மாணவர்களுக்கு பயிற்சி அளித்து பணியமர்த்த திட்டமிட்டுள்ளன இந்நிறுவனங்கள்.

# வாட்ஸ்அப் கணக்குகள் முடக்கம்



விஜயபாரதம்

வாட்ஸ்ஆப் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'கடந்த ஜூன் 16 முதல் ஜூலை 31வரை இந்தியாவில் +91 என்ற செல்போன் எண்ணில் தொடங்கும் 30 லட்சத்து 27 ஆயிரம் வாட்ஸ்ஆப் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. இதில் 95 சதவீதக் கணக்குகள் அதிகாரபூர்வமற்ற பயன்பாடு காரணமாக முடக்கப்பட்டவை. மத்திய அரசின் புதிய தகவல் தொழில்நுட்ப விதிகளின் அடிப்படையில், இக்காலகட்டத்தில் 594 புகார்கள் வந்தன. அதில், 74 புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டன' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கேரளா கர்நாடகா உஷார்



விஜயபாரதம்

இலங்கை வழியாக பயணித்து 12 பயங்கரவாதிகள் கேரளா மற்றும் கர்நாடகாவின் கடலோரப் பகுதிகளில் நுழைய வாய்ப்புள்ளதாக உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. சந்தேகத்திற்கிடமான நடவடிக்கைகளை கண்டால் உடனடியாக காவல்துறைக்கு தகவல் தெரிவிக்குமாறு கேரள, கர்நாடகா மீனவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். சுதந்திர தின கொண்டாட்டங்களின்போது அதனை சீர்குலைக்க பாகிஸ்தான் பயங்கரவாத அமைப்புகள் ஜம்மு கஷ்மிர் பகுதியில் டிரோன்களை பயன்படுத்தி தாக்குதல் நடத்த முயற்சித்தனர். ஆனால் அந்த முயற்சிகள் அனைத்தையும் நமது பாதுகாப்பு படையினர் வெற்றிகரமாக தடுத்தனர். அதனால், அவர்கள் தற்போது பாரதத்தின் தெற்குப் பகுதியில் தாக்குதல் நடத்த முயற்சிக்கலாம் என கருதப்படுகிறது.

# பழமையான துர்கை சிலை மீட்பு




விஜயபாரதம்

ஜம்மு காஷ்மீரின் புட்காம் மாவட்டத்தில் நவாஸ் அஹ்மத் ஷேக் என்பவர் வீட்டில் இருந்து 1,200 ஆண்டுகள் பழமையான துர்கா தேவியின் சிலையை அம்மாநில காவல்துறையினர் கைப்பற்றியுள்ளனர். ஆற்றில் இருந்து மணல் எடுக்கும் தொழிலாளர்களால் அந்த சிற்பம் ஸ்ரீநகரில் உள்ள ஜீலம் நதியில் கண்டுபிடிக்கப்பட்டது என தெரிவித்த நவாஸ், அதனை விற்க முயன்றுள்ளார். அந்த அழகிய சிற்பத்தை அருங்காட்சியத்தில் காவல்துறையினர் ஒப்படைத்தனர்.ஐ

# தடுப்பூசியில் முன்மாதிரி மாநிலம்



விஜயபாரதம்

கொரோனா தடுப்பூசியின் முதல் டோஸை 18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் 100 சதவிகிதம் செலுத்தி முடித்து, மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாகவும் பாரதத்தின் முதல் மாநிலமாகவும் ஹிமாச்சல் பிரதேசம் மாறியுள்ளது. மாநிலத்தின் சுகாதார அமைச்சர் ராஜீவ் சைசல், 2021 நவம்பர் 30 க்குள் இவர்கள் அனைவருக்கும் இரண்டு டோஸ்களுக்கும் போட்டு 100 சதவீத தடுப்பூசியை நிறைவு செய்வதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறோம் என தெரிவித்தார்.

# பா.ஜ.க.வில் மற்றொரு எம்.எல்.ஏ.


விஜயபாரதம்

அசாமில் பத்ருதீன் அஜ்மலின் ஏ.ஐ.யு.டி.எப் கட்சியை சேர்ந்த ஒரே ஹிந்து சட்டமன்ற உறுப்பினரான ஃபானி, அக்கட்சியை விடுத்து அசாம் முதல்வர் டாக்டர் ஹிமந்தா பிஸ்வா சர்மா முன்னிலையில் பா.ஜ.கவில் இணைந்தார். முன்னதாக, காங்கிரசின் ரூபஜோதி குர்மி, சுஷாந்தா போர்கோஹெய்ன் ஆகியோர் பா.ஜ.கவில் இணைந்தனர் என்பதும் தற்போது அசாமில் பா.ஜ.கவில் இணைந்த மூன்றாவது எதிர்க்கட்சி எம்எல்ஏ ஃபானி என்பதும் குறிப்பிடத்தக்கது.

# முதல் பெண் சுரங்க பொறியாளர்



விஜயபாரதம்

ஜார்க்கண்டின் ஹசாரிபாக் மாவட்டத்தில் உள்ள பார்காகான் நகரில் வசிக்கும் அகன்க்ஷா குமாரி, நிலத்தடி சுரங்கத்தில் பணிபுரியும் முதல் பெண் சுரங்க பொறியாளர் என்ற பெருமையை பெற்றுள்ளார். சென்ட்ரல் கோல் ஃபீல்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் வட கரன்புரா பகுதியில் உள்ள சூரி நிலத்தடி சுரங்கத்தில் இவர் பணி புரிகிறார். அங்கு பணியில் உள்ள இரண்டாவது பெண் சுரங்க பொறியியலாளர் இவர். ஆனால், நிலத்தடி நிலக்கரி சுரங்கத்தில் நேரடியாக பணிபுரியும் முதல் பெண்மணி. சிறு வயதில் இருந்தே தங்கள் பகுதியில் உள்ள நிலக்கரி சுரங்கங்களை பார்த்து வளர்ந்த இவர், அதன் மீதான ஈர்ப்பால் சுரங்கப் பொறியியல் படிப்பை தேர்ந்தெடுத்துப் படித்தார். இதற்கு முன்பு, ராஜஸ்தானில் உள்ள ஹிந்துஸ்தான் ஜிங்க் நிறுவனத்தின் பலாரியா சுரங்கத்தில் மூன்று ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். நிலக்கரி, சுரங்கம் மற்றும் பாராளுமன்ற விவகாரங்களுக்கான மத்திய அமைச்சர் பிரகலாத் ஜோஷி, அகன்க்ஷா குமாரியை பாராட்டியுள்ளார்.

# அமெரிக்காவின் மோசமான செயல்பாடு



அமெரிக்காவில் அதன் முன்னாள் ராணுவ ஜெனரல், அட்மிரல் என பெரிய பதவிகளில் இருந்து ஓய்வு பெற்ற மூத்த அதிகாரிகள் ௯0 பேர் அமெரிக்க அரசுக்கு எழுதியுள்ள கடிதத்தில், அமெரிக்க ஜனாதிபதியின் முதன்மை இராணுவ ஆலோசகர்களாக உள்ள அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் (SECDEF) மற்றும் கூட்டுத் தலைமைத் தலைவர் (CJCS) தலைவர் ஆகியோர் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்ய வலியுறுத்தியுள்ளனர். 'அவர்கள் தங்கள் கடமைகளை சரிவர செய்யத் தவறிவிட்டனர். ஆப்கானிஸ்தானில் இருந்து ஆபத்தான மற்றும் அவசரமான வகையில் படைகளை திரும்பப்பெற்றுள்ளனர். அமெரிக்காவிற்கு விசுவாசமாக இருந்த ஆப்கானியர்களின் பாதுகாப்பை உறுதி செய்யாமல் அவசரமாக அந்நாட்டை விட்டு வெளியேறினர். இது தோல்விகரமான பின்வாங்கல் என அவர்கள் அக்கடிதத்தில் கூறியுள்ளனர்.

விஜயபாரதம்

# 41 தலிபான்கள் கொல்லப்பட்டனர்

தலிபான்களின் எதிரிகளான நார்தர்ன் அலையன்ஸ் எனப்படும் வடக்குக் கூட்டணி அமைப்பை சேர்ந்தவர்களை அழிக்க தலிபான்களின் பயங்கரவாதப் படையினர், ஆப்கானிஸ்தானில் கவாக் கணவாய் அருகே வந்தபோது இரு படையினருக்கும் ஏற்பட்ட சண்டையில் கடந்த 24 மணி நேரத்தில் 41 தலிபான்கள் கொல்லப்பட்டனர், 20 பேர் கைது செய்யப்பட்டனர், எங்கள் பக்கம் இருவருக்கு காயம் ஏற்பட்ட்து என நார்தர்ன் அலையன்ஸ் தளபதி ஹாசிப் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில் 'நாங்கள் உங்களை பள்ளத்தாக்குக்குள் நுழைய அனுமதிப்போம் ஆனால் உங்களை வெளியே விடமாட்டோம்' என தெரிவித்தார். தலிபான் அமைப்பினருக்கு இந்த செய்தி பெரும் அதிர்ச்சியை கொடுத்துள்ளது.

விஜயபாரதம்





# வீடியோ கேம் கட்டுப்பாடு



விஜயபாரதம்

சீனாவில் நேற்று முதல் அமலுக்கு வந்த புதிய விதிமுறைகளின்படி, சீன நாட்டில் 18 வயதிற்கு உட்பட்ட அனைவரும் இனி வாரத்தில் 3 மணி நேரம் மட்டுமே வீடியோ கேம் விளையாட முடியும். வெள்ளி, சனி, ஞாயிற்றுக் கிழமைகள், தேசிய விடுமுறை நாட்களில் மாலை 8 மணி முதல் 9 மணி வரை மட்டுமே அவர்கள் வீடியோ கேம் விளையாட முடியும். இனி, 18 வயதுக்குக் கீழ் உள்ளோர் தங்களின் உண்மையான பெயர், முகவரி உள்ளிட்ட விவரங்களை அளித்தால் மட்டுமே வீடியோ கேம் விளையாட பதிவு செய்ய முடியும். முன்னதாக, கடந்த 2018ல் புதிய வீடியோ கேம்களை அறிமுகப்படுத்த தடை விதிக்கப்பட்டது. 2019ல், 18 வயதிற்கு கீழ் உள்ளவர்கள் வாரநாட்களில் ஒரு நாளைக்கு 90 நிமிடங்கள் மட்டுமே வீடியோ கேம் விளையாடலாம். இரவு 10 மணி முதல் காலை 8 மணி வரை வீடியோ கேம் விளையாடக் கூடாது என உத்தரவிடப்பட்டது. இதனால் சீனாவின் வீடியோ கேம் நிறுவனங்களான நெட்ஈஸ், டென்சென்ட் உள்ளிட்டவை மிகக்கடுமையாக பாதிக்கப்பட்டன.

# கொடூர தலிபான்கள்



விஜயபாரதம்

ஆப்கானிஸ்தானில் ஆட்சியை கைப்பற்றிய தலிபான்கள், அமெரிக்கா விட்டுச்சென்ற ராணுவ ஹெலிகாப்டரில் அமெரிக்கர்களுக்கு மொழிபெயர்ப்பாளராக பணியாற்றி வந்த ஆப்கனை சேர்ந்த ஒருவரின் உடலை தொங்கவிட்டு ரோந்து சென்றனர். இக்காட்சிகள் சமூக வலைதளங்களில் வெளியாகி உள்ளது. 'இது எங்களது விமானப்படை' என தலைப்பை வைத்து தங்கள் டிவிட்டர் பக்கத்தில் தலிபான்கள் வெளியிட்டுள்ளனர். காபூலில் தாங்கள் விட்டு வைத்த ராணுவ விமானங்கள் மற்றும் தளவாடங்களை தலிபான்களால் காட்சி பொருளாக மட்டுமே வைக்க முடியும். அவர்களால் இயக்க முடியாது என அமெரிக்க ராணுவ தலைமையகம் பென்டகன் கூறியிருந்த நிலையில் அதை பொய்யாக்கும் வகையில், தலிபான்களின் செயல்பாடு உள்ளது. 'இந்த வீடியோ, ஆப்கன் விவகாரத்தில் அதிபர் ஜோ பைடனின் நடவடிக்கை படுதோல்வி அடைந்ததை உறுதி செய்கிறது, ஒரு மனித உடல் தொங்கும் காட்சி துயரமானது' என ரிபப்ளிகன் செனட்டர் டெட் குரூஸ் விமர்சித்துள்ளார்.

# இயற்கையின் கொடை தேங்காய்



விஜயபாரதம்

பாரதத்தின் தென் பகுதியில் உள்ள மக்களுக்கு என்றும் ஆரோக்கியமாக வாழ உணவாகவும் மருந்தாகவும் இறைவன் அளித்த இயற்கைக் கொடைகள் இரண்டு. அதில் ஒன்று தேங்காய் மற்றொன்று வாழைப்பழம். இவை இரண்டும்தான் வருடத்தில் 365 நாட்களும் விளையும் இயற்கை உணவு பொருட்கள். இது மனிதனுக்காகவே படைக்கப்பட்டது. மனிதன் மட்டுமே இதனை மட்டை உரித்து சாப்பிட முடியும். மற்ற விலங்குகளுக்கு அது கடினம்.

இறைவனுக்கு நாம் படைக்கும் நிவேதனத்தில் தேங்காயும் வாழைப்பழமும் மிகவும் முக்கியமானது. இது உண்மையில் இறைவனுக்காக சொல்லப்பட்டது மட்டுமல்ல, நமக்காகவும் சொல்லப்பட்டதுதான். இவைகளை மட்டுமே உணவாக எடுத்துக்கொண்டால் என்றும் நோயின்றி வாழலாம் என இயற்கை மருத்துவத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

தென்னம்பூவில் இருந்து தேங்காய் முழுதாக உருவாவதற்கு 10 மாதங்கள் தேவை. இது மனித கர்ப காலத்திற்கு சமமான காலம். இறக்க உள்ளோரின் வாயில் பால் ஊற்றுவது தொன்றுதொட்டு உள்ள நடைமுறை. ஆனால், இப்படி தரவேண்டியது மாட்டுப்பால் அல்ல, தேங்காய்பால்தான். தேங்காய் பாலை கொடுப்பதால் அவர்களுக்கு நோய் நீங்கி ஆரோக்கியம் கிடைக்கும் என்பதற்காகவே சொல்லப்பட்டது இது.

ஆரோக்கியமான மனிதன் தேங்காயை எப்படி எடுத்துக்கொள்வது, அது கொலஸ்டிரால் எனப்படும் கொழுப்பை அதிகரித்துவிடாதா என்ற சந்தேகங்கள் அனைவருக்கும் இருக்கும். தேங்காயை முற்றியதாக, பச்சையாக, உடைத்த ஒரு மணி நேரத்திற்குள்ளாக சாப்பிடுவது நல்லது. தேங்காயை பாலாக அருந்தினால் அதில் நமக்குக் கிடைக்க வேண்டிய நார் சத்து உள்ளிட்டவை கிடைக்காமல் போகும். ஆனால் வயதானவர்கள் அதனை நீர்த்து, சர்க்கரை சேர்க்காமல் கொள்ளலாம்.

தேங்காயை மட்டுமே மூன்று வேளை உணவாகவும் குடிக்க தேங்காய் தண்ணீர், இளநீர், சாதாரண நீர் என சில மாதங்கள் தொடர்ந்து எடுத்துக்கொண்டு அனைத்து நோய்களில் இருந்தும் விடுபட்டு ஆரோக்கியம் பெற்றோர் குறித்த பல குறிப்புகள் 'நல்வழ்வு ஆசிரமம்' என்ற இயற்கை மருத்துவமனையை அமைத்து தொண்டு புரிந்த இயற்கை ஆர்வலர் ராமகிருஷ்ணரின் புத்தகங்களில் உள்ளன.

தேங்காயை மட்டுமோ அல்லது அதனுடன் பழங்களை சேர்த்தோ ஒரு முழுவேளை இயற்கை உணவாக எடுத்துக்கொள்ளலாம். தேங்காயை சமைத்தால் அது கெட்ட கொழுப்பாகலாம். அப்படியே பச்சையாக எடுத்துக்கொண்டால் அது உடலுக்குத் தேவையான நல்ல கொழுப்புதான். எனவே அச்சம் வேண்டாம். சமையலில் தேங்காயை சூடாக்காமல் கடைசியாக சேர்த்து மட்டுமே பறிமாறலாம்.